MSSRF M S Swaminathan Research Foundation
Science for Sustainable Development



# தான்சானியா விஞ்ஞானிகளுடன் ஒரு கலந்துரையாடல்

நாள் : **18.07.2023** நேரம் : மாலை 4.00 மணி

இடம் : **தமிழ்நாடு அறிவியல் இயக்க அலுவலகம், புதுக்கோட்டை.**

## எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

புதுக்கோட்டை.

## Taking home paddy cultivation practices from India, says Tanzanian scientists at MSSRF

Pudukkottai: Certain methods of rice cultivation in India would richly contribute towards tackling the water crisis in Tanzania, said a delegation of scientists from Tanzania during a discussion with farmers and agricultural enthusiasts organised by the MS Swaminathan Research Foundation (MSSRF) in Pudukkottai on Tuesday. Five scientists from the Tanzania Agricultural Research Institute (TARI), visited Pudukkottai as part of a seven-day visit to India. "Our country is prone to water scarcity and drought. The SRI method used for paddy cultivation in Pudukkottai would greatly contribute to our eco-system where a better yield can be ensured through lesser seeds," said Atugonza Bilaro, principal research scientist who was part of the delegation.



The delegation from Tanzania in discussion with farmers and agricultural enthusiasts in Pudukkottai, on Tuesday | M MUTHU KANNAN



# ஓணாங்குடியில் தான்சானியா நாட்டு வேளாண் விஞ்ஞானிகள் ஒற்றை நாட்டு நடவினை பார்த்து வியந்தனர்

புதுக்கோட்டை, ஜூலை.18–

புதுக்கோட்டை மாவட்டம் ஓணாங்குடி ஊராட்சியில், எம்எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் ஒற்றை நாற்று நடவு செய்யும் முறையை நடைமுறைப்படித்து வருவதை போல் தான்சானியா நாட்டில் செயல்படுத்துவது குறித்து அறிந்துகொள்ள தான்சானியா வேளாண் விஞ்ஞானிகள் திங்களன்று ஓணாங்குடிக்கு வந்தனர். அவர்கள் ஒற்றை நாற்று நடவு முறைகள் மற்றும் கிராம அறிவு மைய செயல்பாடுகளையும் பார்வையிட்டனர். அவர்களிடம் செயல்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது. அவர்களுக்கு அரிமளம் ஒன்றிய பெருந்தலைவர் மேகலா முத்து, வேளாண் இணை இயக்குனர் பெரியசாமி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முதுநிலை விஞ்ஞானி ராஜ்குமார், ஓணாங்குடி ஊராட்சி மன்ற தலைவர் கரு.முருகேசன்,இயற்கை விவசாயி கோபாலகிருஷ்ணன் ஆகியோர்கள் விளக்கி கூறினர். பின்னர் தான்ஸ் சானியா நாட்டு விஞ்ஞானிகள் ஓணாங்குடி விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.முன்னதாக கிராம கோவிலான வீரமாகாளியம்மன் கோவிலில் தான்சானியா நாட்டு வேளான் குழுவினர் அம்மனை வழிபட்டனர். நிறைவாக ஊராட்சி மன்றம் சார்பில் தலைவர் கரு.முருகேசன் சால்வை அணிவித்து வரவேற்றார்.

# திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் அறிய விரும்பும் தான்சானியா வேளாண் விஞ்ஞானிகள்

## புதுக்கோட்டையில் 2 நாள் சுற்றுப்பயணம்



புதுக்கோட்டை, ஜூலை 19 –

தான்சானியா நாட்டில் தண்ணீர் பற்றாக்குறை நிலவிவரும் சூழலில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை அறிந்து கொள்வதற்காக, அந்நாட்டு வேளாண் விஞ்ஞானிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.

தமிழ்நாட்டில் குறைந்த தண்ணீர், குறைந்த விதையைக் கொண்டு நெல் சாகுபடியில்அதிகமகசூல்பெறும்தொழில்நுட்பத்தை பெரும்பாலான விவசாயிகள் கையாளத் தொடங்கிவிட்டனர். இத்தகைய திருந்திய நெல் சாகுபடி முறையைக் கற்றுக் கொள்வதற்காக தான்சானியா நாட்டில் இருந்து விஞ்ஞானிகள் பில்லாரோ, டிராக்சா மிராஜ், பாபியாலா லாங்கா, காசனேனே, டேனியல் டாசன் ஆகியோர் புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த திங்கள், செவ்வாய் கிழமைகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர்.

அதனொரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் ஐ.எஸ்.மெர்சி ரம்யாவை சந்தித்து பல்வேறு விபரங்களைப் பகிர்ந்து கொண்டனர். இவர்களுடன் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பின்னர், மாவட்ட வேளாண் இணை இயக்குநர் எம்.பெரியசாமி மற்றும் வேளாண் அலுவலர்களுடன் கலந்துரையாடினர். அப்போது, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை கையாளும் முறைகள், அதன் பயன்கள், இந்த முறையை சிறப்பாக செயல்படுத்தும் விவசாயிகளுக்கு அரசு செய்யும் சலுகைகள், அளிக்கப்படும் விருதுகள் குறித்து வேளாண் அலுவலர்கள் அவர்களிடம் விளக்கினர்.

இதனைத் தொடர்ந்து செவ்வாய்க் கிழமை தமிழ்நாடு அறிவியல் இயக்க அலுவலகத்தில் தான்சானியா விஞ்ஞானிகளுடன், விவசாயிகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் தலைமை வகித்தார்.

அப்போது, தான்சானியா விஞ்ஞானிகள் பேசுகையில், "தான்சானியா நாட்டில் பிளாஸ்டிக் தடை முழுமையாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எந்த இடத்திலும் பிளாஸ்டிக் பயன்படுத்த முடியாது. எங்கள் நாட்டில் கடும் வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை அதிகம் உள்ளது. இந்தியாவைப் போன்றே தான்சானியாவிலும் நெல் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. அதில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தை தான்சானியாவில் பின்பற்றினால், நெல் சாகுபடியில் அதிக விளைச்சலை பெறமுடியும் என நம்புகிறோம்.

இந்தியாவைப் போன்று தான்சானியாவில், விவசாயத்தில் சாகுபடி முறைகளைப் பற்றியோ, இடுபொருள் மற்றும் விளைபொருள்விற்பனையைபற்றியோ எந்த தகவலும் விவசாயிகளுக்கு எளிதில் கிடைப்பதில்லை. இத்தகைய விழிப்புணர்வையும், தொழில்நுட்பங்களையும் தான்சானியாவல் செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதிகமாக சோளம் பயிரிடுகிறோம். அதில், அவ்வளவாக பூச்சி நோய் தாக்குவதில்லை" என்றனர்.

கூட்டத்தில், அரிமளம் ஒன்றியக் குழுத்தலைவர் மேகலா முத்து, குழந்தைகள் நலக்குழு தலைவர் கே.சதாசிவம் மற்றும் முன்னோடி விவசாயிகள் கலந்துகொண்டனர். முன்னதாக கள ஒருங்கிணைப்பாளர் டி.விமலா வரவேற்க, எம்.முத்துக்குமார் நன்றி கூறினார்.

விவசாயமில்லா காலங்களில்

# தேசிய ஊரக வேளாண் திட்டத்தில் தொழிலாளர்கள் பயன்

## தான்சானியா விஞ்ஞானிகளிடம் புதுக்கோட்டை கலெக்டர் விளக்கம்



புதுக்கோட்டை, ஜூலை 20: எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த தான்சானியா விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல் நிகழ்வு புதுக்கோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்விற்கு எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் தலைமை வகித்துபேசியதாவது:

ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான தான்சானியா வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து 5 வேளாண்மை விஞ்ஞானிகள் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் புதுக்கோட்டைக்கு வந்துள்ளார்கள். அவர்கள் ஒற்றை நாற்று நடவு என்று சொல்லக்கூடிய செம்மை நெல் சாகுபடி முறை பற்றி பயிற்சி பெறுவதற்காகவும் எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மூலம்செயல்படுத்தப்படும் கிராம அறிவு மையம், வள மையம் மற்றும் பயிர் மருத்துவ முகாம் ஆகியவைகள் பற்றிதெரிந்துகொள்ளவும், பயிற்சிபெறவும்புதுக்கோட்டைக்கு வருகை புரிந்துள்ளார்கள்என்றார். தான்சானியா விவசாய ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி முனைவர் பில்லோரோ புதுக்கோட்டை மாவட்டத்தில் பார்த்த விவரங்களையும் பெற்ற பயிற்சிகள் பற்றியும் விளக்கிப்பேசியதாவது:

இந்தியாவில் புதுக்கோட்டைமாவட்டத்திற்கு வந்திருப்பதுமிக்கமகிழ்ச்சி அளிக்கிறது. அனைவரும் மிக அன்பாக பழகுகின்றனர். இங்குள்ள உணவு மிகவும் பிடித்திருக்கின்றது. இங்குநாங்கள்ஒற்றைநாற்று நடவு முறை, அதற்கான பாய் நாற்றங்காள் தயாரித்தல், நடவு முறை, கோணவீடர் மூலம் களை எடுத்தல், இயந்திரநடவு,காய்ச்சலும் பாய்ச்சலும் முறையிலான நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டுமுறைகள்ஆகியவை பற்றி தெளிவாக தெரிந்து கொண்டோம் என்றார். தான்சனியா நாட்டு விஞ்ஞானிகள் புதுக்கோட்டை மாவட்டகலெக்டர்மெர்சி ரம்யாவை அலுவலகத்தில் சந்தித்தனர். அவர்களிடம் புதுக்கோட்டையில் விவசாய மற்றும் உழவர் நலத் துறைமற்றும்ஊரகவளர்ச்சி துறைமூலம்செயல்படுத்தப் படும்திட்டங்களைவிளக்கி கூறினர். அவர்கூறுகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 60% மக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ வேளாண்மையை தொழிலாக கொண்டுள்ளனர். நிலமில்லா விவசாய கூலிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதில்மகாத்மாகாந்திதேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு சட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயமில்லா காலங்களில் இத்திட்டத்தில் வேளாண் தொழிலாளர்கள் சிறந்த பயன்அடைகின்றனர்.விவசாய தொழிலாளர்களின் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்குவருகைபுரிவதை மாவட்டநிர்வாகம்உறுதிப் படுத்துகிறதுஎன்றார்.

நிகழ்ச்சியில் வேளாண்மைதுறைமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள்,பயிர்காப்பீடுபற்றி வேளாண்மைஇணைஇயக்குனர் பெரியசாமி, உதவி இயக்குநர்கிருஷ்ணமுர்த்தி, வேளாண்மை அலுவலர் முகமது ரபி, துணை இயக்குனர் பாண்டி ஆகியோர் விளக்கினர். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனகள ஒருங்கிணைப்பாளர் விமலா வரவேற்றார். முடிவில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்ட செயலாளர்முத்துக்குமார்நன்றி கூறினார்.

vikatan.com மாதம் இருமுறை PASUMAI VIKATAN Volume: 17 Issue:16 ₹25

# பசுமை விகடன்

25.9.23

மண்ணின் வளமே மக்கள் வளம்



தான்சானியாவில் ராஜ்குமார்



## வரதட்சணையாகப் பசு மாடுகள்... படைப்புழு இல்லாத மக்காச்சோளம்... பாலித்தீன் பைகளுக்குத் தடை...

### வியக்க வைக்கும் தான்சானியா!

கிழக்கு ஆப்பிரிக்கா நாடுகளில் ஒன்றான தான்சானியாவில், இயற்கை வளம் கொட்டிக் கிடக்கிறது. அந்நாட்டு மக்களின் முதன்மையான வாழ்வாதாரம் விவசாயம். ஆண்-பெண் வேறுபாடு இல்லாமல் அனைவருமே விவசாயத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் உழைக்கிறார்கள். பயிர் சாகுபடி மட்டுமல்லாமல்... கால்நடை வளர்ப்பு, மரம் வளர்ப்பு மூலமாகவும் தான்சானியா மக்கள் கணிசமான வருமானம் ஈட்டி வருகிறார்கள்.

நார்வே நாட்டு நிதியுதவியுடன் தான்சானியாவில் இயங்கி வரும் விவசாய ஆராய்ச்சி நிறுவனம்... காலநிலை மாற்றத்துக்கு ஏற்ற மேம்பட்ட இடுபொருள்கள் பயன்பாடு மற்றும் நெல் உற்பத்தித் திட்டத்தை அங்கு செயல்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக அந்நிறுவனத்தின் வேளாண் வல்லுநர்கள் மற்றும் அலுவலர்களுக்குத் தொழில்நுட்ப மேம்பாட்டுப் பயிற்சி அளிக்க, தமிழ்நாட்டிலிருந்து எம்.எஸ்.சுவாமிநாதன்



மஞ்சள் சாகுபடி



ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ராஜ்குமார் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகப் பூச்சியியல் துறை பேராசிரியர் சுவாமிநாதன் ஆகிய இருவரும் தான்சானியா சென்று வந்தனர்.

தான்சானியா பயண அனுபவம் குறித்து நம்மிடம் பேசிய விஞ்ஞானி ராஜ்குமார், அந்நாட்டு மக்களின் வாழ்வியல் முறை, விவசாயம், சுற்றுச்சூழல், கல்வி உட்பட இன்னும் பல தகவல்களைப் பகிர்ந்துகொண்டார்.

"இந்தப் பயணம் தான்சானியா மக்களின் விவசாயம், கலாசாரம், வாழ்க்கை முறை ஆகியவை குறித்து அறிந்துகொள்ள ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது. அங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் விவசாயிகள்.

மக்காச்சோளம், நெல், கோதுமை, வாழை, கரும்பு, காபி, பருத்தி, முந்திரி,



நாற்றங்கால் தயாரிப்பு பயிற்சி





தான்சானியாவில் மரங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, மின்சாரக் கம்பிகள் செல்வதற்கான தூண்கள் அமைக்க, பெரும்பாலும் மரங்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். உயர்



பயிற்சி வகுப்பில்



களையெடுத்தல்



நெல் நடவு இயந்திரப் பயிற்சி



ஒற்றை நாற்று நடவு

மின்னழுத்த மின்கம்பிகள் செல்வதற்குக்கூட மரத்தால் செய்யப்பட்ட தூண்கள்தான் பயன்படுத்தப்படுகின்றன. சில இடங்களில் மின்மாற்றிகள் (டிரான்ஸ்பார்மர்கள்) அமைப்பதற்குக்கூட மரம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்நாட்டில் தடி மரங்களுக்கான தேவை அதிகம் இருப்பதால் அந்நாட்டு விவசாயிகள் மரம் வளர்ப்பில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள்.

தான்சானியா அரசும், அங்குள்ள மக்களும், வேளாண்மைக்கு நிகராகக் கல்விக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது. அனைவரும் பள்ளிக் கல்வி கட்டாயம் படிக்க வேண்டும் என்பதை சட்டமாகவே வைத்திருக்கின்றனர். தான்சானியாவில் பெரும்பான்மையாகப் பேசப்படும் மொழி ஸ்வாஹிலி. அதேசமயம் ஆங்கிலமும் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

உயர்கல்வியில் ஆங்கிலத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. பள்ளி மாணவர்கள் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மிகவும் பொறுப்புடன் நடந்துகொள்கிறார்கள். இதைப் பல பள்ளிகளில் நேரடியாகப் பார்க்க முடிந்தது.

தான்சானியாவிலிருந்து மொராக் கோவுக்குச் சாலை வழியாக சென்றுகொண்டிருந்தபோது... மாலை பள்ளி முடிந்து வரும் மாணவர்கள் துடைப்பத்துடன் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தனர். ஒரு பள்ளி மட்டுமல்ல, அந்த வழியாகச் செல்லும் பல பள்ளிகளில் இதைப் பார்க்க முடிந்தது. அந்தக் காட்சி எனக்குச் சற்றே ஆச்சர்யமாக இருந்தது.

காரை நிறுத்தி விசாரித்தபோது, மாணவர்கள் சொல்லியது நெகிழ்ச்சியாக இருந்தது. 'பள்ளி வளாகத்தையும், வகுப்பறைகளையும் சுத்தம் செய்வது மாணவர்களின் பொறுப்பு. அதனால் தினமும் காலை வீட்டிலிருந்து பள்ளிக்குச் செல்லும்போது துடைப்பத்தை எடுத்துச் செல்வோம். பள்ளியைச் சுத்தம் செய்துவிட்டு

கின்றனர்.



### சேந்தன்குடியில் மிளகு சாகுபடி:

# தான்சானியா வேளாண் அதிகாரிகள் ஆய்வு

கீரமங்கலம், ஜூலை:22-

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம், வடகாடு, அணவயல், பட்டிபுஞ்சை உள்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மிளகு சாகுபடியில் ஈடுபட்டு வருகிறார்கள். குளிர் பகுதியில் மட்டுமே விளையும் என்பதை மாற்றி அனைத்து பகுதியிலும் மிளகு விளையும் என்பதை கீரமங்கலம் விவசாயிகள் செய்து காட்டியுள்ளனர். இதையடுத்து பல்வேறு மாவட்டங்களில் இருந்து விவசாயிகள், விஞ்ஞானிகள் வந்து பார்த்து செல்கின்றனர். அதேபோல் தான்சானியா நாட்டை சேர்ந்த வேளாண் அதிகாரிகள் சேந்தன்குடி கிராமத்தில் விவசாயி செந்தமிழ்செல்வன் தோட்டத்திற்கு சென்று தென்னை, தேக்கு, பலா உள்ளிட்ட மரங்களில் மிளகு சாகுபடி செய்துள்ளதை பார்த்து ஆய்வு செய்தனர்.



# தான்சானியா வேளாண் விஞ்ஞானிகள் கலந்துரையாடல்

**புதுக்கோட்டை:** எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் தான்சானியா நாட்டு விஞ்ஞானிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி புதுக்கோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்க அலுவலகத்தில் நடந்தது.

ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி ராஜ்குமார் தலைமை வகித்தார். தான்சானியா விவசாய ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி பில் லோரோ பேசுகையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ளவர்கள் அன்பாக பழகுகின்றனர். நாங்கள் ஒற்றை நாற்று நடவு முறை, பாய் நாற்றங்கால் தயாரித்தல், நடவு முறை, இயந்திரம் மூலம் களை எடுத்தல், இயந்திர நடவு, ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறைகள் பற்றி தெளிவாக தெரிந்து கொண்டோம். இவற்றை எங்கள் நாட்டில் செயல்படுத்த உள்ளோம் என்றார். ஆராய்ச்சி நிறுவன அலுவலர்கள் செயல் விளக்க பயிற்சி அளித்தனர். தான்சானியா விஞ்ஞானிகள் பிராகிசா மிராஜ், பாபியாலா லாங்கா, காசனேனே, டேனியல் டாசன் ஆகியோர் தாங்கள் களத்தில் பார்த்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். முன்னதாக தான்சானியா நாட்டு விஞ்ஞானிகள் கலெக்டர் மெர்ஸி ரம்யாவை அவரது அலுவலகத்தில் சந்தித்து பேசினர். முன்னதாக ஆராய்ச்சி நிறுவன கள ஒருங்கிணைப்பாளர் விமலா வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்ட செயலாளர் முத்துக்குமார் நன்றி கூறினார்.



தான்சானியா நாட்டு வேளாண் விஞ்ஞானிகள் புதுகையில் கலெக்டர் மெர்ஸி ரம்யாவை சந்தித்து பேசினர். அருகில் எம்எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி ராஜ்குமார்.

ஸ்ரீவெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி
திருக்கோகர்ணம், புதுக்கோட்டை - 622 002.
For More details: 73737 26025 | www.svmhss.com
தலைமுறைகள் பெயர் சொல்லும் தரமான கல்வி!



# தான்சானியா நாட்டு வேளாண் விஞ்ஞானிகளுக்கு எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி



புதுக்கோட்டை மாவட்டத்தில் செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்ப பயிற்சி பெற வந்த தான்சானியா நாட்டு வேளாண் விஞ்ஞானிகள்

எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் ஏற்பாடு செய்திருந்த தான்சானியா விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடல் நிகழ்வு புதுக்கோட்டை தமிழ்நாடு அறிவியல் இயக்க அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்விற்கு எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி ஆர்.ராஜ்குமார் தலைமை வகித்து பேசியதாவது: ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான தான்சானியா வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் இருந்து ஐந்து வேளாண் விஞ்ஞானிகள் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் புதுக்கோட்டைக்கு வந்துள்ளார்கள்.

அவர்கள் ஒற்றை நாற்று நடவு என்று சொல்லக்கூடிய செம்மை நெல் சாகுபடி முறை பற்றி பயிற்சி பெறுவதற்காகவும் எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் கிராம அறிவு மையம், வள மையம் மற்றும் பயிர் மருத்துவ முகாம் ஆகியவைகள் பற்றி தெரிந்து கொள்ளவும், பயிற்சி பெறவும் புதுக்கோட்டைக்கு வருகை புரிந்துள்ளார்கள் என்றார் அவர்.

தான்சானியா விவசாய ஆராய்ச்சி நிறுவன முதன்மை விஞ்ஞானி முனைவர் பில்லோரோ புதுக்கோட்டை மாவட்டத்தில் பார்த்த விவரங்களையும் பெற்ற பயிற்சிகள் பற்றியும் அனுபவங்கள் குறித்தும் பேசியதாவது:






பயிற்சி அனுபவத்தை பகிர்ந்து கொண்ட தான்சானியா நாட்டு வேளாண் விஞ்ஞானி

**இந்தியாவின் முக்கிய மாநிலமாகத்திகழும் தமிழ்நாட்டில் உள்ள புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வந்திருப்பது மிக்க மகிழ்ச்சி அளிக்கிறது. அனைவரும் மிக அன்பாக பழகுகி ன்றனர். இங்குள்ள உணவு மிகவும் பிடித்திருக்கின்றது.**

இங்கு நாங்கள் ஒற்றை நாற்று நடவு முறை, அதற்கான பாய் நாற்றங்கால் தயாரித்தல், நடவு முறை, கோனோவீ டர்மூலம் களை எடுத்தல், இயந்திர நடவு, காய்ச்சலும் பாய்ச்சலும் முறையிலான நீர் மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவை பற்றி தெளிவாக தெரிந்து கொண்டோம்.

மேலும் எம். எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படும் கிராம அறிவு மைய செயல் பாடுகள், அறிவு மையத்தில் எவ்வாறு பல்வேறு தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகளுக்கு தேவையான விவரங்கள் வழங்கப்படுகின்றது.

பயிர் மருத்துவ முகாம் எவ்வாறு பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்த மற்றும் குறைபாடுகளை போக்க உதவுகின்றது, புதிய வகை நுண்ணோக்கி மூலம் கண்ணுக்குத் தெரியாத பூச்சி நோய்களை கண்டறிதல் போன்றவைகளை செயல் விளக்கமாக விவசாயிகளின் உதவியுடன் எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன அலுவலர்கள் களத்தில் செயல் விளக்க பயிற்சி அளித்தார்கள்.

இங்கு கற்றுக்கொண்ட வைகளை எங்கள் நாட்டில் செயல்படுத்த உள்ளோம் என்றார் அவர்.

எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன அலுவலர்கள் ஜி.சுதாகர், பி.செந்தில்குமார், ஏ.கோபால், ஜி.முருகன், ஆர்.வினோத்கண்ணா, பி.சிலம்பரசன் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பூச்சிகள் துறை பேராசிரியர் வி.ஆர்.சுவாமிநாதன் ஆகியோர் செயல் விளக்க பயிற்சி அளித்தனர்.


தான்சானியா விவசாய ஆராய்ச்சி நிறுவன விஞ்ஞானிகள் பிராகிசா மிராஜ் ,பாபியாலா லாங்கா, காசனேனே,டேனியல் டாசன் ஆகியோர்கள் தாங்கள் களத்தில் பார்த்த அனுபவங் களை பகிர்ந்து கொண்டார்கள்.

முன்னோடி விவசாயிகள் ச.வே.காமராசு, ஜி.எஸ்.தனபதி, அ.கோபாலகிருஷ்ணன், எம்.முத்துலட்சுமி ஆகியோர் புதுக்கோட்டை மாவட்ட விவசாய அனுபவங்களை பகிர்ந்தனர்.

அரிமளம் ஊராட்சி ஒன்றிய தலைவர் மேகலா , குழந்தைகள் நல தலைவர் கே.சதாசிவம், நேரு யுககேந்திரா மாவட்ட இளையோர் ஒருங்கிணைப்பாளர் கே.ஜோயல் பிரபாகர், வீ தி இலக்கிய அமைப்பு ஒருங்கிணைப்பாளர் கவிஞர் .கீதா ஆகியோர் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றினார்கள்.

இதில் விவசாயிகள், பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவன பிரதிநிதிகள், உள்ளிட்ட 100 - மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

தான்சானியா நாட்டின் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சுகாதாரம், கல்வி, சுற்றுச்சூழல் உள்ளிட்ட பங்கேற்பாளர் களின் கேள்விகளுக்கு விஞ்ஞானிகள் பதில் அளித்தார்கள்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யாவை சந்தித்த தான்சானியா நாட்டு வேளாண் விஞ்ஞானிகள்

தான்சனியா நாட்டு விஞ்ஞானிகள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் மெர்சி ரம்யாவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சந்தித்தனர். மாவட்ட ஆட்சியர் புதுக்கோட்டையில் விவசாய மற்றும் உழவர் நலத்துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை விளக்கி கூறினார்.

அதில், புதுக்கோட்டை மாவட்டத்தில் 60% மக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ வேளாண்மையை தொழிலாக கொண்டுள்ளனர். நிலமில்லா விவசாயக் கூலிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு திட்டம் முக்கிய பங்கு வகிக்கின்றது.

விவசாயமில்லா காலங்களில் இத்திட்டத்தில் வேளாண் தொழிலாளர்கள் சிறந்த பயன் அடைகின்றனர். விவசாய தொழிலாளர்களின் குழந்தைகள் அனைவரும் பள்ளிக்கு வருகை புரிவதை மாவட்ட நிர்வாகம் உறுதிப்படுத்துகின்றது.

இலவச காலை, மதிய உணவு, விலையில்லா நோட்டு புத்தகங்கள் வழங்குவதன் மூலம் குழந்தைகள் பள்ளிக்கு வருகைபுரிவது உறுதிபடுத்தப்பட்டுள்ளது. தற்போது பண்ணை நிர்வாகத்தில் வயதானவர்கள் மட்டுமே ஈடுபடுவதால், பண்ணை நிர்வாகத்தில் இயந்திரமாதல் அவசியமாகின்றது.

உதராணமாக இராஜராஜன் 1000 எனப்படும் செம்மை நெல் சாகுபடி நாற்றுநடும் இயந்திரத்தின் பயன்பாடு போன்றவை பண்ணை இயந்திரமாவதற்கான உதாரணமாகும் என்றார் ஆட்சியர்.

இதைத்தொடர்ந்து, மாவட்ட வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அலுவலகத்தில் நடந்த நிகழ்வில்,





**வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள், பயிர் காப்பீடு பற்றி வேளாண் இணை இயக்குனர் மா.பெரியசாமி, உதவி இயக்குநர் எஸ்.கிருஷ்ணமுர்த்தி வேளாண்மை அலுவலர் எஸ்.முகமது ரபி, துணை இயக்குனர் கே.பாண்டி ஆகியோர் விளக்கி கூறினார்கள்.**

**எம்.எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன கள ஒருங்கிணைப் பாளர் .விமலா வரவேற்றார். தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மாவட்ட செயலாளர் எம்.முத்துக்குமார் நன்றி கூறினார்.**